


மே 83
மாத இதழ்

27

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# போலீஸ்க்கு சட்டமில்லையா?




இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழின் புகைப்படத்துறையைச் சேர்ந்த திரு. ஹாரி மில்லர் எடுத்து வெளியிட்ட நிழற்படம் இது போக்குவரத்து குற்றங்களைப் பிடிப்பதற்காக சமீபத்தில் அமைக்கப்பட்டது நடமாடும் நீதிமன்றம். நெடுஞ்சாலைகளின் நடுவே போடப்படும் மஞ்சள் கோட்டை மீறிச்செல்லும் வாகனங்களுக்கு இந்த நீதிமன்றம் தண்டனை வழங்கும். போலீஸ் ஊர்தியே நெரிசல் மிகுந்த அண்ணா சாலையில் மஞ்சள் கோட்டை கேட்பாரற்று தாண்டி திரும்பிச் செல்வதை மில்லரின் காமரா படம் எடுத்துவிட்டது. (ஊர்தி எண்: TMO 189)

ஹாரிமில்லர் ஒரு பிரிட்டிஷ்காரர். பிரிட்டனின் சௌத் வேல்ஸில் உள்ள அவான்சீ இவரது சொந்த ஊர். இரண்டாவது உலகப் போரின் போது மாலுமியாக இருந்தார். போருக்குப்பின் இந்தியாவின் மீது கொண்டுள்ள பற்றால், லண்டனில் 'இந்து' பத்திரிகை கிளையில் சேர்ந்தார். பாகிஸ்தானில் சிறப்பு நிருபராகப் பணியாற்றினார். 1956ல் இந்தியா வந்து எக்ஸ்பிரஸ் இதழில் விடாமல் புகைப்படங்களும், அற்புதமான கட்டுரைகளும் எழுதிவருகிறார்.

''இங்கேயே இருந்து மடிவேனே தவிர, இனி வேறு நாட்டுக்குச் செல்லும் எண்ணமில்லை'' என்று இந்த மண்ணோடு

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

தன்னை முப்பது ஆண்டுகளாக ஐக்கியப்படுத்திக் கொண்டவர்.

சுட்டி சார்பில் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு எதார்த்தமாக, ஆணித்தரமாக பதில் அளித்தார்.



**கேள்வி :** மஞ்சள் கோட்டை போலீஸ் ஊர்தி தாண்டுவதைப் படமெடுத்து வெட்ட வெளிச்சமாக்கினீர்களே! அதன் எதிரொலி என்ன?

**ஹா.மீ. :** எதுவும் இல்லை. நான் பல முறை போலீசார் தாங்கள்போடும் போக்குவரத்துச் சட்டங்களை தாங்களே மீறுவதை படம் பிடித்து எழுதியிருக்கிறேன். இப்போது போலீஸ் ஊர்தியே இப்படி சட்டத்தை மீறுவது, எல்லாவற்றையும்விட மோசமானது. நிறைய பணம் செலவு செய்து மஞ்சள் பெயிண்ட் வாங்கி கோடு போடுகிறார்கள். ஆனால் அவர்களே தங்கள் சட்டங்களை மீறும் போது, பாவம் படிக்காத லாரி டிரைவரோ டாக்சி டிரைவரோ இவர்கள் சட்டத்தை பின் பற்றும்படி எப்படி இவர்கள் எதிர்பார்க்க முடியும்? கையும் களவுமாக புகைப்படம் பிடித்துக் காட்டியதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அந்த இடத்திலேயே மற்றவர்களுக்குப் பாடம் புகட்டுவது போல தவறு செய்தவருக்குச் சீட்டு கிழித்திருக்க வேண்டும். என்னிடம் ஒரு நூலகம் வைக்குமளவுக்கு இது போன்ற புகைப்படங்கள் உள்ளன.

**கேள்வி :** அரசு இயந்திரம் இது விஷயத்தில் காட்டும் அசமந்தம் பற்றி உங்கள் கருத்து என்ன?

**ஹா.மீ. :** நீங்கள் என்னை அரசியலுக்கு இழுக்கிறீர்கள். அரசியல் விஷயங்களில் நான் தலையிடுவதில்லை. இந்திய அரசியலை நான் விமர்சிப்பதில்லை என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி :** ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் சமூக அநீதிகள் நடக்கும் போது எப்படி சம்பந்தமில்லாமல் ஒதுங்க முடியும்?

**ஹா.மீ. :** நான் ஒதுங்கவில்லையே. இது போன்ற படங்களை வெளியிட்டு எழுதுகிறேன். அரசியல் வாதிகள் தான் இதில் தலையிட்டு தக்க அதிகாரிகளை நியமித்து இவற்றைத் திருத்தும் பொறுப்பேற்க வேண்டும்.

**கேள்வி :** எழுதுவதைவிட ஒருபடி மேலே சென்று நீங்கள் செயல்பட மாட்டீர்களா?

**ஹா.மீ. :** இல்லை. இதுவே என் வேலை. இதற்கு மேலே அரசியல் எழுத்தாளர்கள், பொதுமக்கள் தான் தங்கள் எதிர்ப்புணர்வைக் காட்ட வேண்டும். இந்தப் புகைப்படமும் கட்டுரையும் வெளியானவுடன் 'இவ்வளவு மோசமாக நடந்திருக்கிறதே இதைப் பார்த்தும் போலீஸ் தலைமை என்னதான் செய்து கொண்டிருக்கிறது' என்று ஒருவர்கூட கடிதம் எழுதவில்லை. மக்களின் மந்தத்தனம் இந்த அளவுக்கு இருக்கிறது. மக்கள் அசட்டையாக இருப்பதால் சம்பந்தப் பட்டவர்கள் கவலைப்படுவதில்லை.

—பேட்டி கார்த்திக்

## தமிழ்த் திரையுலக பிரமுகர்கள் விமர்சனம் விரைவில்!

மசாலா பத்திரிகைகளை அடுத்து, சுட்டியின் கூர்மையான விமர்சன வெளிச்சம் தமிழ்த்திரையுலகத்தின் மேல் விழுகிறது! நம் மக்களிடம் பெருமளவில் நீண்ட கால பாதிப்பு ஏற்படுத்திய பிரமுகர்கள் எம் ஜி. இராமச்சந்திரன், பீம்சிங், ஸ்ரீதர், பாலசந்தர், பாரதிராஜா போன்றோர் பற்றிய தொடர் ஆய்வுக் கட்டுரை விரைவில் இடம் பெறும். முதல் கட்டமாக நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பற்றிய கட்டுரை இடம் பெறும்.

இந்த ஆய்வுத் தொடர் சம்பந்தமாக வாசகர்களிடமிருந்தும், திரையுலகத் தொடர்புடையோரிடமிருந்தும் பயனான தகவல்களை, ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

- சுட்டி ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வெளிவரும்.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
- தனிப்பிரதி 50 காசு
- எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

## "நியாயம் கேட்டேன்" அனுபவக் கட்டுரைப் போட்டி

அஞ்சலகத்தில், ரயில் நிலையத்தில், ரேஷன் கடையில் கல்வி நிலையங்களில், அரசு அலுவலகங்களில், பிற பொது விடங்களில் உங்களுக்கோ, மற்றவர்களுக்கோ அநீதி இழக்கப் பட்டபோது நீங்கள் கிளர்ந்தெழுந்து நியாயமாகத் தட்டிக்கேட்டு அங்கு நீதி பெற்ற அனுபவங்கள் உண்டா?

இருப்பின் மற்றவர்களையும் விழித்தெழச் செய்யும் நடையில், உயிரோட்டமாக உங்கள் அனுபவத்தை எழுதி அனுப்புங்கள்.

முதல் பரிசு: ரூ 100
இரண்டாம் பரிசு: ரூ 50
☐ வெளியிட தேர்ந்தெடுக்கப் படும் பிற எல்லா அனுபவக் கட்டுரைகளுக்கும் ஆறுதல் பரிசு ரூ 20 உண்டு.

**விதிகள்:** 'சுட்டி'யில் 2 பக்கத்துக்குள் இருக்க வேண்டும். (சுமார் 350 வார்த்தைகள்) ☐ மேலே உள்ள சுட்டி வாசகர் கட்டத்தை வெட்டியிணைத்து அனுப்புதல் அவசியம். ☐ ஒன்றுக்கு மேற்பட்ட அனுபவங்களையும் ஒருவரே அனுப்பலாம். ஒவ்வொரு கட்டுரையுடனும் "சுட்டி வாசகர்" வெட்டிணைப்பு அவசியம். ☐ கட்டுரைகளைப் பிரதி எடுத்துக் கொண்டு அனுப்புக. திரும்பி அனுப்ப அஞ்சல் வில்லை வைக்க வேண்டாம். ☐ வந்து சேர வேண்டிய இறுதி நாள் 30-6-1983 ☐ போட்டி முடிவுகள் 1-8-1983 இதழில் வெளியாகும். ☐ உறைமேல் "அனுபவக் கட்டுரைப் போட்டி" எனக் குறிப்பிடுக.


**புது அச்சகம் தொடங்குவோர் கவனிக்கவும்**

☐ சரியான வழிகாட்டுதலுடன், சிறந்த அச்சு எழுத்துக்கள், உபகரணங்கள் பெற மறவாமல் தொடர்பு கொள்க:—

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

அலுவலகம் : 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம் : 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7
தொலைபேசி: 37999, 664293


## குழந்தைப் பள்ளிகள்

"கிண்டர் கார்டன்" (L.K.G., U.K.G.) வகுப்புகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு நடக்கின்ற ஆர்ப்பாட்டங்கள் 'மெடிக்கல்', இன்சினீயரிங்' ஞக்கு கூடக் கிடையாது. 'ஜோக்'குக்காக அல்ல. முழுக்க முழுக்க நிதர்சனமான உண்மை.

சில பிரபல பள்ளிகளில் காலை 9 மணிக்கு வழங்கப் படும் அப்ளிகேஷனுக்கு, காலை 5-30 மணி முதல் மிக நீண்ட க்யூ. அதிலும் பெற்றோரே நின்றாக வேண்டும். அப்ளிகேஷனில் பெற்றோரின் படிப்பு உட்பட ஏகப்பட்ட விவரங்களுக்கு கேள்விகள். பின்னர், சரியாகவே பேச வராத பிராய குழந்தைகளுக்கு "இண்டர்வியூ" காலை 8 முதல் இரவு 8வரை நடக்கிறது. பெற்றோர் வேலைகளை விட்டு சோறு தண்ணீ மறந்து குழந்தைகளுடன் சமாதானப் போர் செய்து கொண்டு பழி கிடக்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக "நன்கொடை" என்ற பெயரில் ரூ. 5000/- வரை வேறு

இவ்வளவு சித்திரவதைக்குட்பட்டு குழந்தைகளை இந்தப் பள்ளிகளில் சேர்க்க பேற்றோர் ஏன் போராடுகிறார்கள்? தரமான நல்ல படிப்பு, நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுங்கு முறை இவற்றையெல்லாம் விட இது மாதிரி ஆங்கில 'கான்வென்ட்' பள்ளிகளில் தங்கள் குழந்தைகள் படிப்பது ஒரு சமூக அந்தஸ்தை ஏற்படுத்தும் என்ற போலி மேல்தட்டு மாயைதானே இதற்கு மூல காரணம்!

இந்தப் போலித் தனத்தைச் சாகடிக்க வேண்டுமாயின் நாட்டின் அத்தனைக் குழந்தைப் பள்ளிகளும் ஒரே சீராக பிராந்திய மொழியில் ஒரே மாதிரி மிகச்சிறந்த பாட முறைகள், ஒழுக்கமுறை, தூய்மை இவற்றை கான்வென்ட் பள்ளிகளைவிடச் சிறப்பாகக் கடை பிடிக்க சட்டமியற்றி கல்வித் துறை கடுமையாகச் செயல்படுத்த வேண்டும்.

அதைவிட்டு, வாயளவில் அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கும் அமைச்சர், அவருக்கு ஓர் அமைச்சகம், இயக்குனர்கள் அதிகாரிகள் இத்யாதி. இவர்கள் இதையெல்லாம் செயல்படுத்துவதை விட்டு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? முதுகு சொரிந்து கொண்டிருக்கிறார்களா?

எதிர்காலக் குடிமக்களைச் சிறப்பாகத் தயார் செய்வதைவிட முக்கியமான காரியம் ஓர் அரசாங்கத்துக்கு வேறு என்ன இருக்க முடியும்?

—சுயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

✲ தமிழக அரசு அறிவித்துள்ள வீட்டிற்கு ஒருவர் வேலைத் திட்டம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

—சுஜாதாப்ரியன், ஒன்னிபாளையம்

ஆளும் கட்சியின் பலநோக்குப் பதவிப் பாதுகாப்பு திட்டங்களில் இதுவும் ஒன்று.

✲ முற்போக்கு சாயம் பூசிக்கொண்டு தங்களை விளம்பரப் படுத்திக்கொள்ளும் பத்திரிகைகளில் ஒன்றாக சுட்டியை நான் கருதலாமா?

—பன்னீர்செல்வம் வேதாரண்யம்

பலருக்கு, பொய் மாயங்களை நம்புவது எளிதாக இருப்பது போல நிஜங்களை நம்புவது எளிதாக இல்லையே! எந்தச் சாயமும் ஒரு நாள் வெளுத்துவிடும் என்பது சுட்டியின் ஆழ்ந்த நம்பிக்கை-காலம் உங்களைப் புரிய வைக்கக் கூடும்.

✲ நேர்மையான அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள் தானே?

—ஆர். புவனேந்திரன் திருவொற்றியூர்

நிச்சயமாக! அம்மணர்கள் ஊரில் கோவணம் கட்டியவரைப் போல.

✲ மத்தியில் இந்திராவின் ஆட்சியையும் மாநிலத்தில் எம்.ஜி.ஆர் ஆட்சியையும் ஒப்பிடுக. —உதயசூரியன் தஞ்சை

தண்ணீர் சப்ளை செய்து செல்வாக்கு பெற முயல்பவர்கள். 'தண்ணி' சப்ளை செய்து செல்வாக்கு பெற்றவர்கள்'

✲ பொருளாதார ரீதியில் நம் தேசம் உருப்பட?

—எஸ். கல்யாணசுந்தரம் சேலம்

உழைப்பவர்களிடம் பொருளாதாரம் கைமாறவேண்டும். பின் கடும் உழைப்புடன் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

✲ நாட்டில் உழைப்பாளிகள் எண்ணிக்கை குறைந்து சோம்பேறிகள் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் என்ன?

—சூரியநாராயணன் நாகை

வெட்டிப்பேச்சு அரசியல்வாதிகளின் எண்ணிக்கை பெருகி விட்டது தான்.


# சுட்டியார் பதில்



## ஏழைகள்

இவர்கள்
வறுமைப் பத்திரிகையின்
ஆயுள் சந்தாதாரர்கள்.

—புதுவை சீனு தமிழ்மணி



## முன்னேற்றம்

அன்று
சம்பாதிக்காமல்
சமைத்தவர்கள்
இன்று
சம்பாதித்து
சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்!
ஓ........
இந்நாட்டில்
பெண்ணினம்
ரொம்பத் தான் முன்னேறி
யிருக்கிறது.

—மே. விஜயகுமார்

## தீப்பெட்டி

பத்து காசு கொடுத்து
வாத்து மார்க் தீப்பெட்டி
வாங்கி வந்து
தந்தையிடம்
நீட்டிய பையன்
கேட்டான்
"அப்பா, நான்தான்
கோவணம் கட்டுகிறேன்
தீப்பெட்டிக் கூடவா
கட்டும்?"

—ந. க. துறைவன்

## ஏசு மட்டுமா?

ஏசு மட்டுமில்லை...
இறந்து போன
எனது தாத்தா கூடத்தான்
உயிர்த்தெழுகிறார்...
தேர்தலுக்கு
ஓட்டுப் போட...



—வண்ணை வளவன்



FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# அமுது “சந்தன” மருத்துவம்

இந்தக் கோடை வெப்பத்தின் கொடுமையில் நமது உதவும் உற்ற நண்பன் சந்தனம். எப்போதும் வீட்டில் சந்தனக் கட்டை வைத்திருங்கள்.

தணியாத நாவறட்சி வாட்டுகிறதா? எவ்வளவு நீர் குடித்தும் தாகம் தணியவில்லையா? இளநீர் வாய்முனையில் ஒரு சிறிய பொத்தல் போடுங்கள். அதனுள் சந்தனத்தூளைப் போட்டு ஊற வைத்து, பிறகு வடிகட்டி அருந்துங்கள். தாகம் சுத்தமாக அடங்கும்.

கோடையில் ஏற்படும் வேர்க்குருவிற்கு அரைத்த சந்தனத்தைப் பூசினால் எரிச்சல் அடங்கும். தேங்காய் நீரில் சந்தனத்தை இழைத்துப் பூசி வந்தால் வேர்க்குரு பட்டுப் போகும்.

சுரத்தால் ஏற்படும் தலைவலி, புருவத்தில் வலி இவற்றிற்கு சந்தனத்தைத் தேனில் அரைத்து நெற்றியில் பற்றுப் போடுங்கள். உடனே தெரியும் குணம்.

அரைத்த சந்தனத்தில் கொஞ்சம் தண்ணீர் கலந்து, 10 நிமிடம் தெளிய வைத்து தெளிந்த ஒரு டம்ளர் நீரில் தேன், சர்க்கரை கலந்து உண்டால் வயிற்றுப் பொருமல், சீதக் கழிச்சல், வெப்பம், தணியும்.

எலுமிச்சம் பழச்சாறு விட்டு சந்தனக் கட்டையை அரைத்து, சாற்றைப் பூசினால் நமைச்சல், சொறி, சிரங்கு அக்கி, தேமல் போன்ற சரும நோய்கள் பறந்தோடும்.

சந்தனக் கட்டையைப் பொடி செய்து, நன்கு காய்ச்சிய நீரில் கலந்து, பிறகு வடிகட்டி அருந்த சுரம், மாந்தம், மார்புத் துடிப்பு இவை குணமாகும். இந்நீர் தீவிர நாடி நடையை நன்னிலைப் படுத்துவதில் சூரன்.

முகப்பரு மறைய பஜார் ‘கிரீம்’கள் எதற்கு? தீராத முகப்பரு வேரோடு மறைய சந்தனம், மிளகு, ஜாதிக்காய் கூட்டியரைத்து முகப்பருவின் மீது 10 நாட்கள் தொடர்ந்து தடவிப் பாருங்கள். எளிய நிச்சயமான நிவாரணி இது.

சந்தனத்தில் மூன்று வகையுண்டு. சிவப்பு நிற சந்தனம் மருத்துவத்திற்கு சிறந்தது; மஞ்சள் நடுத்தரம், வெண்மை பயனற்றது.

—சித்தன்

# மேனியின் நிறம்

சிவந்த மேனி மணம்கள் தேவை (Fair looking bride) என்று நம் நாளிதழ்களில் திருமண விளம்பரங்கள் சாரிசாரியாக வெளி வருகின்றன. அழகு, பண்பு இவற்றோடு உடல் நிறத்தையும் தொடர்பு படுத்தும் இந்த அறிவினம், வளர்ந்த நாடுகளிலும் உள்ள நோய். இந்த அர்த்தமற்ற நிறக் கோட்பாடு ஆதிக்க உணர்வு, ஆதாயம் இவற்றிற்கு வசதியாக இருப்பதால் சில நாடுகளே இவற்றைக் கடைப்பிடித்து வருகின்றன.

சூரியனின் கெடுதலான கதிரை ஏற்று கெடுதலற்ற கதிராக மாற்ற தோலில், ‘மெலானின்’ எனப்படும் நிறமிகள் உள்ளன. அதிக சூரிய ஒளி படுகையில் அதிக மெலானின் உற்பத்தியாகி தோலைக் கருப்பாக்குகிறது. உண்மையில், கறுப்புத் தோலே, சூரியக்கதிரைச் சிறப்பாக பாதுகாக்கும் திறன் படைத்ததால் அதுவே உயர்ந்த தன்மை படைத்தது.

வெள்ளை இனம், கறுப்பு இனத்தின் மேல் ஆதிக்கம் செலுத்தியதற்குச் சில பூகோள ரீதியான காரணங்கள் உண்டு. குளிர் நாட்டுக் காரர்கள், எப்போதும் இயற்கையோடு போராடும் நிலையிலிருப்பதால், சுறு சுறுப்பாகவும், தேவை காரணமாக புதிய கண்டுபிடிப்பாளர்களாகவும் இருக்கிறார்கள். இயற்கையின் அரவணைப்பால், தேவைகளுக்குப் போராட அவசியமின்றி, அதனால் புதிய வளர்ச்சியின்றியிருந்த வெப்ப நாட்டு மக்களை வெள்ளையர்கள் எளிதில் அடிமைப்படுத்தினார்கள். அடிமைபடுத்தியவனின் நிறம் வெள்ளை என்பதால் அதுவே உயர்ந்த நிறமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

முடி மட்டும் கறுப்பாக இருக்க ஆசைப்படுபவர்கள், தோல் மட்டும் கறுப்பாக இருந்தால் கேவலமாக நினைப்பது என்ன அறிவுடைமை?

அறிவு என்பது கல்விக் கேற்ப, சூழலுக் கேற்ப வளருகிறதே தவிர, நிறத்திற்கேற்ப இனத்திற்கேற்ப வளருவதில்லை என்கின்றன விஞ்ஞான பரிசோதனைகள். இதுவரை உலகில் நடந்த அறிவுக் கூர்மை (I Q) போட்டிகளில் மிக அதிக மதிப்பெண் பெற்றிருப்பது ஒரு நீக்ரோ பெண் தான்!

நிறத்தைக் காட்டி உலகை அடக்குவது இனியும் இயலாது!

—உலகப்பன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# வாடகை தராத அமைச்சர்கள்

சகல சௌகரியங்களுடன், அரசாங்க சொகுசு பங்களாக்களில் நம் வரிப்பணத்தில் ராஜ வாழ்க்கை அனுபவித்து வீட்டு அவற்றுக்கான மிகக் குறைந்த வாடகையை வருஷக் கணக்கில் தராமல் சில கௌரவமான மத்திய அமைச்சர்கள் நழுவுவதாக அதிகாரப்பூர்வமான தகவல்கள் வந்துள்ளன.

மத்திய அமைச்சராக இருந்து சமீபத்தில் பஞ்சாப் கவர்னரானவர், ஏ.பி. சர்மா • அமைச்சராக இருந்தபோது டில்லியில் அவர் 4 இடங்களில் குடியிருந்தார். டில்லி அக்பர் சாலையில் 17 ஆம் நம்பர் அரசாங்க வீட்டை இன்னும் மேற்படியார் காலி செய்தபாடில்லை. பிப்ரவரி 28 வரை அரசுக்கு, சர்மாவின் வாடகை பாக்கி ரூ. 9153. கவர்னரை அரசு தட்டிக்கேட்டு விடுமா?

முன்னாள் அமைச்சர் சரஞ்சித் சனானா மந்திரி பதவியும் எம்.பி. பதவியும் போன பிறகும் ரேஸ் கோர்ஸ் சாலை வீட்டை காலி செய்யாமல் குடியிருந்து வருகிறார். இதுவரை இவரின் வாடகை பாக்கி ரூ. 28,037.

பழைய மந்திரி டாக்டர் தினேஷ் சிங் வாடகை பாக்கியில் எந்த அமைச்சரையும் சவால் விடக்கூடிய மலை விழுங்கி. தியாகராஜ் சாலை 1ஆம் எண் வீட்டிற்கு மட்டும் கூசாமல் ரூ. 63,680 வாடகை பாக்கி வைத்து பட்டியலில் முதலிடம் வகிக்கிறார்.

வாடகை பாக்கி பட்டியலில் இடம் பெறும் மற்ற பிரபல அமைச்சர்கள் :— முன்னாள் மந்திரி ஓம் மேத்தா ரூ. 49,680; முன்னாள் மந்திரி எம். ஆர். கிருஷ்ணா ரூ. 40,261 • கடந்த செப்டம்பரில் மந்திரி பதவியிழந்த எஸ். எஸ். சிசோடியாவின் பாக்கி ரூ. 9135. இன்னும் இவர் அரசு வீட்டில் அட்டையாக ஒட்டிக் கொண்டு காலி செய்யாதிருக்கிறார்.

வருமான வரி பாக்கியிருந்தால், பாமரர்களைக் கிடுக்குப் பிடிபோட்டு வருமானம் பெறுமிடத்திலேயே வரியைக் கறப்பதில் சூரனாக இருக்கும் அரசு நம்வரிப்பணத்தில் கோடிக் கணக்கில் வாடகை பாக்கி வைத்திருக்கும் இந்த அரசியல்வாதிகளிடம் அதே கண்டிப்பைக் காட்டத் துணியுமா? அல்லது காந்தி கணக்கு தானா?

—ஸ்டெனிஸ்லாஸ்

## பாரதியார் பத்திரிகை:

மகாகவி பாரதியார் 'இந்தியா' பத்திரிகையை 1906-ல் தொடங்கினார். அந்தப் பத்திரிகையின் ஆண்டு சந்தா விவரம் இப்படித் தரப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| எல்லா கவர்மெண்டாருக்கும் | : ரூ | 50 |
| ஜமீன்தார், ராஜாக்கள் முதலியவர்களுக்கு | : ரூ | 30 |
| மாதம் ரூ 200 மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு | : ரூ | 15 |
| மற்றவர்களுக்கு | : ரூ | 3 |

## பாரதியார் ஈரோடு கூட்டம்

ஈரோடு நகரில் கருங்கல் பாளையம், காரை வாய்க்கால் இந்த இரு இடங்களில் மகாகவி பாரதியார் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இதில் விசேஷம் என்னவென்றால் இவையே பாரதியின் கடைசி சொற்பொழிவுகள்.

—பூவை இரா. இராஜபாரதீ

## சுட்டி முன் இதழ்களைப் படிக்கத்தவறி விட்டீர்களா?

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும்-அறிவூட்டும். சரியாக பிரச்சனைகளைப் பார்க்கத் துணை புரியும். முன் இதழ்களை சேமியுங்கள், படிக்காதவர்களுக்கு வழங்கி பயன்படுத்துங்கள். தற்போது இதழ் எண்: 7 முதல் 26 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

## 'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்

'சுட்டி'யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக் கொடுத்து அறிமுகப்படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரியிதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக்குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

FREE E-BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# ஜனநாயகத்தின் நான்கு தூண்கள்

சட்டமன்றம், நீதி மன்றம், நிர்வாகத்துறை, பத்திரிகைத் துறை இவை நான்கும் ஜனநாயகத்தைத் தாங்கும் 4 தூண்களாகக் கருதப்படுகின்றன. இதில் முதல் மூன்றின் கடமைகள் அரசியல் சட்டத்தில் தெளிவாகவும், சரியாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

நமது அரசியல் சட்டப்படி மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவுமே தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால் நடைமுறையில் பல்வேறு கட்சிகள் பொய்யான கவர்ச்சி மிக்க வாக்குறுதிகளை வீசி மக்களிடம் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. அதிக அளவில் பிரதிநிதித்துவம் பெற்று ஆளும் தகுதி பெறும் கட்சியின் ஒரு பகுதியே நிர்வாகத் துறையையும் அமைக்கிறது. இத்துறையோ மறைமுகமாக தனக்குக் கட்டுப் படுபவரையே குடியரசுத் தலைவராக ஆக்கி வருகிறது. இந்தத் தலைவரே நாட்டின் தலைமை நீதிபதியையும் ஏனைய நீதிபதிகளையும் நியமனம் செய்கிறார். ஆக நிர்வாகத் துறையே மறைமுகமாக நீதிமன்றத்தையும் அமைக்கிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் நீதிமன்றம் நிர்வாகத்திற்கு கீழ்ப் பட்டு இயங்குவது என்பது ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அசைக்கும் விஷயம்·அண்மையில் ஏற்பட்ட நீதிபதிகளின் திடீர் மாற்றங்கள், பதவிக் காலம் நீடிப்பு, நீதிபதிகளின் தீர்ப்புக்குப் பின்னரும் நிர்வாகம் காட்டும் அசட்டை இவை நீதிமன்றங்களின் சுதந்திர இயக்கத்தைச் சந்தேகத்திற்குள்ளாக்குகின்றன.

சட்டமன்றம் நிர்வாகத் துறையின் நடவடிக்கைகளைக் கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும். அப்படி கண்காணித்து கேள்வி எழுப்பும் நேரத்தில் நிர்வாகத் துறையின் தலைமையிலுள்ள அமைச்சர்கள் மன்றத்திற்கே வருவதில்லை. அப்படியே வந்தாலும் மக்களுக்காக வாதாடுவதாகக் காட்டிக் கொள்ளும் எதிர் கட்சிகள் ஆளும் கட்சியின் பால் தமக்குள்ள பகைமையுணர்வைக் காட்டவே மக்கள் பிரச்சனைகளைப் பயன்படுத்துகின்றன. அப்படியே தப்பித்தவறி மாட்டிக் கொண்டு விட்டாலோ கமிஷன் கடவுள்கள் தோன்றி நிர்வாகத்தைக் காப்பாற்றி விடுகிறார்கள். கடைசியில் நிர்வாகம் தன்னிச்சையாக சர்வ வல்லமையுடன் இயங்கும் அபாய நிலைக்கு வழி ஏற்படுகிறது.

மக்கள் மன்றங்களில் கேலிக் கூத்தடிக்கும் இந்தப் பிரதிநிதிகள் யார்? மக்களின் பிரதிநிதிகள் தானே! அப்படியானால் இவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களும் அத்தகையவர்களே என்று தானே புலப்படுகிறது! ஆக நாட்டு மக்கள் நேர்மையாக, ஒழுக்கமுள்ளவர்களாக மாறாத வரையில் சட்டமன்றங்கள் கேளிக்கை மன்றங்களாகவே திகழும்.

ஒரு முறை ஆட்சிக்கு வரும் கட்சி தொடர்ந்து ஆட்சியில் நீடிப்பதிலேயே தீவிர அக்கறை காட்டுகிறது. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் கட்ட பணியாக அடிப்படைக் கல்வி சீரழிக்கப் படுகிறது. கல்வி மக்களைத் திருத்தி விட்டால் அப்புறம் இவர்களுக்கு வாழ்வேது? அடுத்த கட்டப் பணியாக அன்றாடங் காய்ச்சிகள், தாழ்த்தப் பட்டவர்களது நிலையை உயர்த்துவது போல பாசாங்கு செய்கிறது. காரணம் ஜாதிக் கொடுமை, வறுமை, சுரண்டல், நிறைந்த தரிசு நிலத்தைத் தானே கட்சிகள் தமது சிறந்த பந்தய மைதானமாகக் கருதுகின்றன! மூன்றாவது அம்சமாக படித்த மக்கள் விழித்து விடாதிருக்க ஜனநாயகத்தின் 4ம் தூணான பத்திரிகைத் துறையை (FOURTH ESTATE)வலுவிழக்கச் செய்கிறது. மசாலா பத்திரிகைகளும், ஆபாச ஏடுகளும் மக்களைத் தாலாட்டி அரசியலிலிருந்து அன்னியப் படுத்துவதைக் காக்கவும் மக்களை உறக்கத்தினின்று எழுப்பும் பத்திரிகைகளை ஒடுக்கவும் இயற்றும் சட்டங்கள் இத்தூணின் அடித்தளத்தையே தகர்க்கின்றன. அது மட்டுமல்ல அரசுக்கு ஆதரவாகவும் எதிராகவுமுள்ள கட்சி சார்புள்ள ஏராளமான பத்திரிகைகள் பல்வேறு விதமான செய்திகளை வெளியிடுவதினால் உண்டாகும் குழப்பம் ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற நிலையையே தோற்றுவிக்கிறது.

இந் நிலையில் விஷயங்களை சீர்தூக்கிப் பார்த்து மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்ட உண்மையான, கட்சி சார்பற்ற பத்திரிகை எது என்பது மக்களுக்கு எப்படித் தெரியும்?

ஆக நம் நாட்டில் ஜனநாயகம் ஒரு உடைந்த நாற்காலியில் தான் அமர்ந்திருக்கிறது. எனவே புதிய நாற்காலியை நாம் தயாரித்தாக வேண்டும்.

—நிலா

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

பிற நாடுகள்

# நிகாரகுவா என்றொரு நாட்டினிலே



மத்திய அமெரிக்காவிலேயே மிகப் பெரிய நாடு இது. ஏறக்குறைய 1½ லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள இப் பிரதேசத்தின் மொத்த மக்கள் தொகையே 25 லட்சம் தான். 1502ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி கொலம்பஸ் இதைக் கண்டு பிடித்தார். இதன் மீது ஆதிக்கம் செலுத்த அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் நடந்த போட்டியில் அமெரிக்கா வென்றது. அதன் ஆதரவுடன் சொமோசா 1933ல் இந் நாட்டின் சர்வாதிகாரியானான்.

நாட்டின் பொருளாதாரத்தில் 95 சதம் சொமோசா குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. தொழில் மூலதனத்தில் 80 சதம் அமெரிக்காவிற்குச் சொந்தமாயிருந்தன. மக்கள் கலை மீதோ 1087 கோடி டாலர்கள் கடனாய் விழ்ந்தன. படித்தவர்களில் பாதிப் பேர்க்கு மேல் வேலையில்லாமல் வீதியில் அலைந்தார்கள். சொமோசாவின் இறுதிக் காலத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 400 பேர் கொல்லப் பட்டார்கள்.

சாண்டினோ என்பவரின் பெயரால் அமைந்த தேச விடுதலை முன்னணி ஒன்று இதர முற்போக்கு சக்திகளுடன் இணைந்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் புது வரலாற்றைப் படைத்தது. சொமோசா 1979 ஜூலை 17ல் நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தான். மக்கள் அரசு மலர்ந்தது.

சாண்டினோ என்ற மாவீரன் அந் நாட்டின் வரலாற்று புருஷனாய் போற்றப் படுகிறார். அமெரிக்காவின் ஆதிக்கத்தையும், சொமோசாவின் சர்வாதிகாரத்தையும் எதிர்த்துப் போராடி அரை நூற்றாண்டுக்கு முன்பே உயிர்த்தியாகம் செய்த உத்தமப் புதல்வர். இன்றைய இளைய தலை முறை அவரது கனவை, நிறைவேற்றியுள்ளது.

ஆயினும் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நிகாரகுவாவை மீண்டும் தமது வலையில் வளைத்துப் போட சதி செய்து வருகின்றன. சுற்றியுள்ள நாடுகளான எல். சால்வடார், ஹாண்டுராஸ், கௌதமாலா போன்ற நாடுகளின் மூலம் மோதலை உருவாக்கி—உள் நாட்டுக் கலகத்தின் மூலம் உழைப்பாளர்களின் ஆட்சியை உதிர்த்து விட பெரும்பாடு படுகின்றன. கோடிக் கணக்கில் டாலர் மழையைப் பொழிந்துவருகின்றன. சொந்த தேசத்தைப் பாதுகாக்க நிகாரகுவாவின் தொழிலாளி வர்க்கமும் மாணவ—இளைஞர்களும் சர்வபரித் தியாகம் புரியத் தயார் என்று சபதம் ஏற்றுள்ளார்கள். உலகு தழுவிய ஆதரவு இதற்குப் பெருகி வருகிறது.

— பு. எஸ். ரவீந்திரதாஸ்

# மாதவிடாயும் மாதம் ஒரு நாவலும்

சிவசு: "மாதம் ஒரு நாவல்" என்று பீறிவரும் அச்செழுத்துக்களை என்ன சொல்கிறீர்கள்?

**வல்லிக்கண்ணன்:—**



"Monthly discharge" என்று சொல்லலாம். பெண்களுக்கு தவறாது மாதம் ஒரு முறை வெளிப்படுகிற இயற்கை நியதி மாதிரி, மாதம் தவறாது இந்த நிறுவனங்களும் அச்சுத் தயாரிப்புகளை வெளிப் படுத்தியவாறு இருக்கின்றன.

தாளை வெள்ளைத் தாளாக விற்பனை செய்வதை விட, கறுப்பு மையால் கறை படுத்தி பளபள அட்டைக்குள் அடக்கி 'புத்தகம்' என்று விற்பதில் அதிக லாபம் கிடைப்பதால் பத்திரிகை நிறுவனங்கள் இந்த உபதொழிலையும் செய்து வருகின்றன.

'குமுதம்' நிறுவனம் (மாலைமதிக்காக) இப்படித் தான் கதை இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு "ஸம்மரி" கொடுத்து ஸ்டார் எழுத்தாளர்களையோ, இதர எழுத்தாளிகளையோ எழுதச் செய்து, இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி, "நாவல்" வியாபாரம் செய்கிறது. 2000 ரூபாய்க்காக இரண்டே நாளில் ஒரு நாவல் எழுதி முடித்து விட்டதாக சம்மந்தப்பட்டவர்களும் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி இருக்கையில், தரமாவது, கற்பனையாவது. சிருஷ்டிப் புதுமையாவது!

'மாதம் ஒரு நாவல்' தயாரிப்பு வரிசையில் அபூர்வமாக எப்பவாவது ஒரு நல்ல கதையும் வந்து விடுகிறது. அது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம் தான்

நன்றி: 'அம்மா': —"காலத்தின் குரல்" என்ற நூலிலிருந்து

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# சிங்கப்பூரிலிருந்து...

சிங்கப்பூரில் உள்ள இன்பெண்ட் ஜீசஸ் தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியை ஜோன் டேய் என்ற சீனப் பெண்மணி. சமீபத்தில் சென்னை வந்திருந்த அவரது அனுபவங்களைக் கேட்டதில் சில:—

**கேள்வி:** இந்தியாவுக்குள் நுழைந்த போது உங்களுக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் என்ன?


பம்பாய் விமான நிலையத்தில் கஸ்டமஸ் அதிகாரி எனது பெட்டியைத் திறந்து புரட்டி எடுத்தார். பூனா அருகே ஒரு பயிற்சி முகாமிற்காகவும், சுற்றுப் பயணம் செய்யவும் வந்திருக்கும் நான், தெரிந்த ஒருவருக்காக C-60 காசெட் டேப்புகள், 30 மட்டுமே நான் வாங்கி வந்தவை- பிற என் சொந்த துணிமணி வகைகள். இந்த காசெட்டுகளுக்கு ரூ 200 அபராத வரி கட்டும்படிச் சொன்னார்கள். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. காரணம் அவற்றை நான் வாங்கிய விலையே கிட்டத்தட்ட அவ்வளவு தான். அத்தனை காசெட்டுகளையும் பறித்துக் கொள்ளுங்கள் நான் பணம் தருவதற்கில்லை என்று உறுதியாகச் சொல்லி விட்டேன். இப்படிச் சொன்னவுடன், என்னிடமிருந்த பென்சில் செட், சில பேனாக்களை, தனது மனைவிக்கு வேண்டுமென அவராக எடுத்துக் கொண்டுபோக விட்டார்.



**கேள்வி:** இந்தியாவையும் இந்தியர்களையும் பற்றி சிங்கை மக்கள், சிறப்பாக சீனர்கள் என்ன நினைக்கிறார்கள்?

முன்பு சீனர்கள் இந்தியர்களைக் கறுப்புப் பிசாசு என்பார்கள். ஏன் வெள்ளையர்களைக் கூட பிசாசுகள் என்பர். எங்களது புதிய தலைமுறை பாரபட்சமின்றி எல்லா இனத்தோடும் கலந்து பழகுகிறது. இந்தியாவின் மதிப்பு இப்போது உயர்ந்திருப்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று இந்திரா காந்தி பற்றிய கௌரவமான அபிப்பிராயம். ரொம்பப் பேர் இந்திரா காந்தி, காந்தி குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று நினைத்து வருகிறார்கள். இரண்டு இந்தியாவிடமுள்ள அணு சக்தி.

பேட்டி: எழில்




FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# வாசகர் குமுறல்

**'டிரங்கால் அசட்டை'**

□ மதுக்கரையான எங்கள் ஊரில் உள்ள பொது (?)த் தொலை பேசி அலுவலகத்திற்கு மாலை 6-30 மணிக்கு சென்று ஊட்டிக்கு டிரங்கால் புக் பண்ண வேண்டும் என்று கேட்டேன். அங்கிருந்த போஸ்ட் மாஸ்டர், "6 மணிக்கு மேலே எல்லாம் எங்களுக்கு நேரம் இல்லை வேறு வேலையாக வெளியில் செல்கிறேன் நாளைக்கு வாங்க" என்று சொல்லி பூட்டி விட்டு சென்று விட்டார். தபால், தந்தி இரண்டுக்கும் அவரே பொறுப்பாளராக இருந்ததால் தந்தி அலுவலகமும் 6 மணிக்கு மேல் செயல் படாது. தன் வேலை முடிந்தபின்தான் பொது வேலை என்ற இத்தகைய சுய நல வாதிகளின் நடத்தையை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனிக்கும் படி பணிவுடன் வேண்டுகிறேன்.

—M. மோகன் ராஜ், மதுக்கரை, கோவை—105

**காசு விழுங்கும் இயந்திரங்கள்:**

□ பெரும்பாலும் புகை வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், திரையரங்குகளில் வாசம் புரியும் பெரும்பான்மை எடை காட்டும் இயந்திரங்கள் எப்போதும் பழுதடைந்தவையாகவே இருக்கின்றன. எடை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் காசு போட்டால் எடை குறிக்கப்பட்ட அட்டை வருவதில்லை. தப்பித் தவறி அட்டை வந்து விழ்ந்தாலோ 'எடை' குறிப்பிடப் படுவதில்லை. பொது இடங்களில் இப்படிப்பழுதான எந்திரங்களை வைத்திருக்கும் இதன் உரிமையாளர்கள் இதில் விழும் காசுகளை மட்டும் தினந்தோறும் வந்து சேகரித்துச் செல்வார்கள். இதயமற்ற இயந்திரங்களை வைத்து பிழைப்பு நடத்தும் இவர்களின் பொறுப்பற்ற தனம் கண்டிக்கத் தக்கதாகும்.

—சீ. இராதாமன்

**ரேஷன் ஆட்களுக்குச் சம்பளமில்லை**

□ கடந்த ஜூன் 1982 ல் புதிய ரேஷன் கார்டுகள் வழங்குவதற்காக நூற்றுக் கணக்கில் ஆண்களும் பெண்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்கள் எழுதிய கார்டுகள் அனைத்துக் குடும்பங்களுக்கும் ரூ 2 பெற்றுக் கொண்டு வழங்கப் பட்டும் விட்டது. ஆனால் இன்று வரை கார்டு எழுதிய இளைய சமுதாயத்திற்குத் தரப்பட வேண்டிய சம்பளப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. வேலையில்லா இளைஞர்களுக்கு பெரிய மனதுடன் 25 நாட்கள் வேலை கொடுத்து விட்டு அதற்குத் தரப்பட வேண்டிய தொகையினை சுமார் 10 மாத காலமாகியும் வழங்காமலிருக்கும் நம் தமிழக அரசின் நேர்மையையும் திறமையையும் நினைக்கும் போது ரத்தம் கொதிக்கிறது!

—N. அசோகன் 90D, ராமையா காலனி திருப்பூர்

**அஞ்சலட்டை 35 பைசா!**

□ ஏப்ரல் 1-ம் தேதி "முட்டாள்களின் தினம்" என்றழைக்கப் படுகிறது. ஆனால் அன்று உண்மையிலேயே முட்டாள்களானவர்கள் மதுரை மக்களே. ஆம்! 15 பைசா தபால் கார்டு வாங்க தெரியாத்தனமாய் சைக்கிளில் சென்று விட்டால் 35 பைசா கொடுக்க வேண்டும். தலைமைத் தபால் நிலையத்தில் இந்தப் புதிய கொள்ளையை மாநகராட்சி ஆரம்பித்திருக்கிறது. சைக்கிளுக்கு 20 பைசா!

15 பைசா கார்டு வாங்க சைக்கிளுக்கு சேர்த்து 35 பைசா. 10 பைசா மணியார்டர் பாரம் வாங்க முப்பது பைசா செலவு. ஓசியில் 'அக்னாலெட்ஜ் மெண்ட் கார்டு' வாங்க சைக்கிளுக்கு 20 பைசா. இதை யார் கேட்பது?

—கே. தீபன் மேலப் பொன்னகரம் மதுரை-10

**சென்னை பஸ்ஸில் வெளியூரார்**

□ வெளியூர்களிலிருந்து வருபவர்கட்கு சென்னை நகரிலுள்ள இடங்கள் யாவும் தெரியுமென்று சொல்லவியலாது. நடத்துநர் ஒவ்வொரு நிறுத்தத்தின் பெயரையும், அந்தந்த இடம் வந்ததும் சொல்ல வேண்டுவது இன்றியமையாததாகும். ஆனால் அப்படிச் சொல்வதில்லை. என்னை தி.நகரில் இறக்கி விடுமாறு சொல்லியிருந்தேன். கே.கே.நகரில் கொண்டு இறக்கி விட்டார். மற்றோர் சமயம் "தி.நகர் பவர் ஹவுஸ்" என்று டிக்கெட் வாங்கினேன். தி.நகர் நகருந்து நிலையத்தில் கொண்டு போய் விட்டார். ஒரு அம்மையார் தேனாம் பேட்டை கடைத் தெருவில் இறக்கி விடும் படி கூச்சலிட்டார். மையிலாப்பூர் கொண்டு விட்டார். அடிக்கடி நகரப் பேருந்தில் செல்பவர்கள் உந்து நிலையத்தில் நின்றதும் இறங்கி விடுகின்றனர். ஆனால் முதன் முறையாக சென்னைக்கு வருபவர் என்ன செய்வார்? நடத்துநர்கள் மனிதப் பண்புடன் உந்து நிறுத்தங்களின் பெயர்களை உரத்த குரலில் கூற வேண்டுகிறோம்.

—வி. பொ. பழனிவேலன்: திருத்துறைப்பூண்டி

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

கடைசிப் பெருமூச்சை விட்டுவிட்டு ரயில் புறப்படத் தயாரான போதுதான் அவர்கள் இரண்டு பேரும் வேகமாக ஓடிவந்தார்கள்.

புதிதாக ஆரம்பிக்கபபட்டுள்ள மக்கள் நலவளர்ச்சிக் கழகத்தின் செயலாளர் நடராஜனும் பொருளாளர் பெருமாளும் தான் அவர்கள்.

நடராஜன் வளர்ந்து வருகின்ற பேச்சாளன். அவன் பேச்சில் சமுதாயத் தீமைகளைச் சுட்டுப் பொசுக்கும் நெருப்புப் பொறி பறக்கும். கண்களில் கோபக்கனல் தெறிக்கும். வெறும் வாய்ப்பந்தல் போடாமல் செயலில் காட்டும் துணிச்சல் மிக்கவன் அவன்.

லஞ்சத்தை ஒழிப்பது எப்படி?— என்று மூன்று மணி நேரம் பேசிவிட்டு, அதற்கு லஞ்சமாக அதிகத் தொகை வாங்குகிற ஆள் இல்லை அவன்.

சிறுகதை

# செயல்வீரர்கள்

'லஞ்சம் ஏன் வளர்கிறது? மக்கள் கொடுப்பதால்தான் வளர்கிறது. முதலில் நீங்கள் கொடுப்பதை நிறுத்துங்கள். அதிகாரிகள் வாங்குவதை நிறுத்திவிடுவார்கள். லஞ்சம் ஒழிய வேண்டும் என்ற எண்ணம் நம் மனத்தில் ஆணித்தரமாக இருக்க வேண்டும். அப்போதுதான் லஞ்சம் ஒழியும்!' என்று மிகச் சரியான கருத்தைப் பேசிப்பலருடைய பாராட்டைப் பெற்றவன் தான் நடராஜன்.

அந்தப் பொதுக்கூட்டம் முடிந்த பிறகுதான் தெரிந்தது அவர்கள் இருவரும் திரும்பிச்செல்ல ரயிலில் 'பர்த்' டிக்கட் ரிசர்வ் செய்யப்படவில்லை என்று!

என்ன செய்வது என்று தீவிரமாக ஸ்டேஷனில் யோசித்துக் கொண்டிருந்த போது இரண்டுபேர் தங்களுடைய டிக்கட்டை கேன்சல் செய்ய வந்திருப்பது தெரிந்தது. ஒரே ஓட்டத்தில் அவர்களை மடக்கி டிக்கட்டை வாங்கிக்கொண்டார்கள்.

டிக்கட்டைச் சரிபார்த்த பெருமாளுக்கு முகம் சுண்டியது. காரணம் ரிசர்வ் செய்திருந்த இருவருடைய வயதும் அறுபத்தி இரண்டு, அறுபத்தி மூன்று என்று எழுதியிருந்தது. ரயில்வேயில் இப்பொழுது ரொம்பக் கண்டிப்பாக நடந்து கொள்கிறார்கள் என்ற செய்திவேறு அவன் வயிற்றைக் கலக்கியது. சரி

■ ஓட்டல்களிலும், விருந்துகளிலும் நாம் ஆண்டு தோறும் சாப்பிடாமல் வீணாக்கும் உணவை சுமார் 5 கோடி பேர் உண்டு பசியாறலாம்.

எப்படியோ அட்ஜஸ் செய்து கொள்ளலாம் என்ற முடிவோடு வண்டியில் ஏறினார்கள்.

டிக்கட்டின்படி இப்பொழுது அவர்களுடைய பெயர்கள் : குப்புசாமி, கோவிந்தன்.

அந்த ரிசர்வேஷன் கம்பார்ட்மெண்டுக்கு உரியசெக்கிங் இன்ஸ்பெக்டர் வந்தார்.

'டிக்கட்டை எடுங்க, யாரு குப்புசாமீங்கிறது?'

'நான்தான் சார்!' என்றான் பெருமாள்.

'நீயா? அப்ப... கோவிந்தன்கிறது?'

'மேல் பர்த்தில படுத்திருக்காரு சார்!'

'இறங்கச் சொல்லையா பார்க்கணும்!'

'எதுக்காக சார்?'

'இதுல வயசு அறுபத்திரண்டு போட்டிருக்கு. உனக்கு இருபத்தி ஆறு வயசுதான் இருக்கும். என்னை ஏமாத்தவா பாக்குறீங்க? அதெல்லாம் என்கிட்டே நடக்காது. பேசாம அடுத்த ஸ்டேஷன்ல கீழே இறங்கிடுங்க!'

'சார் நாங்க அவசரமா......'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் ரொம்பக் கண்டிப்பானவன், நீங்க அடுத்த ஸ்டேஷன்ல கீழே இறங்கித்தான் ஆகணும்!'

இனிமேலும் பொறுக்கமுடியாது என்ற தீர்மானத்தோடு நடராஜன் கீழே குதித்தான்.

'சார் ஒரு நிமிஷம் இப்படி வாரீங்களா?' என்று தனியாகக் கூப்பிட்டான்.

ரயிலின் இதயத் துடிப்பு அதிகமானது. எதற்கோ பெருங்குரலெடுத்து அழுவது போல விசில் பெரிதாக முழங்கியது.

செக்கிங் இன்ஸ்பெக்டர் தனது மணிபர்ஸை பாக்கெட்டுக்குள் திணித்துக்கொண்டார்.

இருவரும் சிரித்தபடி வந்தார்கள்.

'உங்களுக்கு மேலே உள்ள பர்த் சிரமமா இருக்குமே! கீழே உள்ள பர்த்துக்கு மாத்திக்குங்க. இப்ப ரொம்ப சௌகரியமா இருக்கா?' என்று சிரித்தபடியே கேட்டுவிட்டு அடுத்த வகுலைக் கவனிக்கப் புறப்பட்டார் அந்தக் கண்டிப்பானவர் —வ. தேனப்பன

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

## நூல் விமர்சனம்

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மொழிபெயர்ப்பு

தாழ்த்தப்பட்டோர், பழங்குடிங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி... என தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழ்படுத்தியுள்ளார் தோழர் தியாகராஜன். இவர் தமிழகச் சிறையில் அடைபட்டுள்ள சமூக அக்கறையுள்ள ஆயுள்தண்டனைக் கைதி.

நீதிபதிகள் கிருஷ்ணய்யர், பதக், சின்னப்பரெட்டி ஆகியோர் பதவி உயர்வில் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகையின் மீதான வழக்கில் அளித்த தீர்ப்பு வரலாற்று முக்கியம் வாய்ந்தது.

இது ஒரு புத்தகம் மட்டுமல்ல. இலக்கியச் சுவையோடு சமூகப் பொருளாதார நிலவரத்தை அப்பட்டமாக்கிக் காட்டுகிற அற்புதக் 'களஞ்சியம். நடப்பிலுள்ள விபரங்களாலும் சமூகத் தன்மையுள்ள விவாதங்களாலும் இரு நீதிபதிகளும் மேல்தட்டு வாதத்தை தோலுரித்துக் காட்டுகின்றனர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதால் நிர்வாகம் திறன் குறைந்து தள்ளாடுவதாக எழுப்பப்பட்ட வாதத்திற்கு சூடான பதிலை அள்ளி வீசுகிற தீர்ப்பு இது, "அரிசனங்கள் சேர்க்கப்படாவிட்டால் ரயில் விபத்துக்கள் நீண்ட விடுமுறை எடுத்துக்கொள்ளுமோ? நீதிமன்றங்கள் ஒன்றும் கறுப்பு அங்கி உடுத்திய ஏமாளிகளல்ல எதைச் சொன்னாலும் நம்புவதற்கு!"— கிருஷ்ணய்யரது அடிமனத்திலிருந்து எப்போதும் போல் கொப்பளித்துள்ளவைதான் இவை.

இத்தீர்ப்பை தமிழ் படுத்தியுள்ள பாங்கு சிறப்பானதே ஆனால் ஆங்காங்கே கையாளப்பட்டுள்ள சொற்கள், நீண்ட வாக்கிய அமைப்பும்—நம்மை சில தலைமுடியை கையோடு சேர்த்துக்கொள்ளச் செய்கிறது. நீதிபதி கிருஷ்ணய்யரின் சொல்லும் பாணி மொழி மாற்றம் செய்வதற்கு முதுகுவலியைக் கொடுக்கக் கூடியதே. அதற்காக தாத்தாகாலத்து வடமொழி சொற்களைப் போட்டு நம்மைத் திணறடிக்க வேண்டுமா?

ஜனத்திரள், தாவா, ஊர்ஜிதம், வாஸ்தவமான, பிரஜை சிருஷ்டிக்கவும்—இவை சில. ஆனாலும் மூவர்களின் படைப்புத் தன்மை சிதையாமல் தமிழ்ப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 8-00 இந்த விலை பாமரர்களை விலக்கிவிடக் கூடியதே.

இதனை வெளியிட்டோர்: சென்னை புக் ஹவுஸ் (பி) லிட். 6, மேட்லி ரோடு, சென்னை-600 017. —இரத்தினம்

# மதத்தின் பெயரால்



3.4.83 தினமலரில், வெளியாகிய செய்தி உண்மையாக இருக்குமாயின் 1.4.83 பெரிய வெள்ளியன்று பிலிப்பைன்ஸ் நாட்டு தலைநகர் மணிலாவை அடுத்த சான்பெர்னாண்டோ நகரில் மதத்தின் பெயரால் நடந்த கொடுமை உள்ளம் உருக்குவதாகும்.

தாங்களே சிலுவையில் அறைய ஒப்புக் கொள்கிறார்கள் என்று சொல்லி 4 பேர்களைச் சிலுவையில் ஆணி கொண்டு அறைந்ததையும், அதை 10,000 மக்கள் பார்த்துக் கொண்ருந்ததையும் அந்தச் சமய மக்களே எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும்.

இது ஒன்றும் கிறித்துவ சமயத்திற்கு மட்டும் உரியது என்று நினைத்து விட வேண்டாம். ஏறத்தாழ எல்லா மதங்களுமே இம்மாதிரியான முட்டத்தனமான காரியங்களைச் செய்கின்றன மதத்தின் பெயரைச் சொல்லி.

முருக பக்தி என்ற பெயரில் உடம்பில் இரும்புக் கொக்கிகளைக் குத்தி மாட்டிச் சிறு தேரை இழுக்கச் செய்தால தான் கடவுள் திருப்தி அடைவாரா? முருகன் திருத்தலங்களில் திருவிழாக் காலங்களில் 2½ வயது அழகு சிறுவர்களை முருகன் போல் கோவணங்கட்டி விபூதி பூசிவேலைக் கொடுத்து நாளெல்லாம் வெயிலில் நிற்க வைக்கும் கொடுமை குழந்தை உலகிற்கு செய்யும் பெரிய துரோகச் செயலல்லவா?

நாக்கில் வேலைக் குத்திக் கொண்டு மணிக்கணக்காக இருத்தல் பக்தி மார்க்கத்தில் இருப்பவர்களுக்கு இன்பமாக இருக்கலாம். ஒரு விதமான உள நிலையில் வலியில்லாமலும் இருக்கலாம். இந்தக் கொடிய பக்தி மார்க்கம் தான் அன்பின் வடிவாக சொல்லப்படும் ஆண்டவனை மகிழ்விக்குமா?

தெய்வ பக்தியைக் கொடிய சித்திரவதை மார்க்கமாக திருப்புவது உண்மை மத மார்க்கமுமல்ல, சன் மார்க்கமுமல்ல. —சுபா

☐ ஏழை நாடுகளின் பட்டியலில் இந்தியா 87-வது நாடாக இருந்தது. இப்போது 115-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது; நமக்கும் கீழே இன்னும் 8 நாடுகள் உள்ளன!

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

# அறிவியக்கம்

## இதழ் விமர்சனம்

ஆசிரிய அலுவலகம் சென்னை வண்டலூரிலும், பொது மேற்பார்வை தில்லியிலும், அச்சகம் குடந்தையிலும் கொண்டு வெளி வருகிறது, "அறிவியக்கம்,' மாத இதழ். நிர்வாகம் சிதறியிருந்தாலும் கடந்த 92 மாதங்களாக ஓரிதழ் கூட நிற்காமல் இது வெளி வருவதற்கு முக்கிய காரணம் இது ஓர் கட்டுக் கோப்பான இயக்கத்தின் இதழ் என்பதே.

திராவிடக் கழகத்திலிருந்து சிந்தனா ரீதியாக சிதறி வளர்ந்து பொதுவுடைமை கோட்டு பாடுகளிடம் கரை சேர்ந்த பல்வேறு பழைய தி.க முகாம்களில், ஒன்று தான் அறிவியக்கப் பேரவை. இதன் அமைப்பாளர் முனைவர் சாலய் இளந்திரயன், தில்லி பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர். அறிவியக்க இதழின் சிறப்பாசிரியரும், ஜீவ நாடியும் சாலய் தான்.

முழு வெள்ளைத் தாளில் கிட்டத்தட்ட "துக்ளக்" அளவில் 16 பக்கம் வெளியாகும் இவ்விதழில் பக்கத்துக்குப் பக்கம் வேகமும், துடிப்பும் நிறைந்த எழுத்துக்கள் ஆரவாரிக்கின்றன. "பாதகம் செய்பவரைக் கண்டால் அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" என்ற பாரதியின் வேகம் இதன் கட்டுரைகளின் நேரடியான தாக்குதலில் தெரிகிறது. (பாரதி மேல் இவர்கள் கோபம் கொண்டுள்ளது வேறு விஷயம்)

இதே வேகத்துடன் கொத்தடிமைகள் நிலைமை, காவலரின் கொடுமைகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டவிழ்க்கப்பட்ட அநீதிகள், அரசியல் வாதிகளின் தகிடுதத்த வேலைகள் இவற்றை நெளிவு சுளிவின்றி அப்பட்டமாகப் புட்டு வைக்கிறது அறிவியக்கம்.

ஒடப்பாரயிருப்போர் உதையப்பர் ஆக வேண்டிய நிலையை அடிக்கடி காட்டி வந்த அறிவியக்கம், தனது தலை 82 இதழில் "சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியாது. சிலரேனும் மடியாமல் பகைவெல்ல முடியாது. நாட்டின் நலிவுகள் தீர வன்முறயப் புரட்சி தான் வழி" என்ற அறிவியக்கப் பேரவயின் 11 வது ஆண்டறிக்கை முழக்கத்தை ஒளிவு மறைவின்றி வெளியிட்டுள்ளது.

பெரியார் மேல் அளவற்ற மதிப்பு கொண்ட அறிவியக்கம் (எடைக்கு எடை கட்சித் தலைவர்கள் நாணயம் வாங்கிய நிகழ்ச்சியைக் கண்டித்து எழுதிய போது) பெரியாரின் சில பிழைகளையும் ஒப்புக் கொண்டிருப்பது அதன் நடுவு நிலை சிந்தனைக்குச் சான்றாகும். எடைக்கு எடை பெரியார் பொருள் பெற்ற வேடிக்கை விளையாட்டையும், பொதுக் கூட்டங்களில் மற்றவர்கள் பேசும் போதும் தன் நாய்க்கு பிஸ்கெட் போட்டு மக்கள் திசை திரும்ப காரணமாக இருந்ததையும் சரியென அது ஒப்புக் கொள்ளாமல், 'பெரியார் தொண்டர்களா, பரமார்த்த குரு சீடர்களா' என்ற தலைப்பில் பெரியாரைத் துணைக்கிழுக்கும் இன்றைய தலைவர்களைச் சாடியது.

அறிவியக்க இதழில் "உரை வீச்சு" என்னும் புது இலக்கிய வகை இடம் பெறுகிறது. மரபுக் கவிதை, புதுக் கவிதை இல்லாமல் இன்னொரு புது வடிவம் இது. இந்த வடிவில் கவித்துவத்தை விட, வெடிப்புற பேசும் சிந்தனா வேகம் இருக்கிறது. இதழில் முகப்பு அட்டையில் இதழ்தோறும் இந்த உரை வீச்சு இடம் பெறுகிறது.

எழுத்துச் சீர்திருத்தத்தின் அடுத்த கட்டமாக ஐ, ஔ ஆகிய எழுத்துக்களை நீக்கி அவற்றை அய், அவ் எனவே எழுதி வாசகர்களுக்கு அறிவியக்கம் பழக்கப் படுத்தி வருவது நல்ல மொழிச்சீர்த்திருத்தத் தொண்டாகும்.

செயல் நேர்மையுடன் 'அறிவியக்கம்' இயங்க முற்பட்டாலும், சில வழுக்கல்களும், முரண்பாடுகளும் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை:

'மற்றதய் எல்லாம் மூட்டை கட்டி வய்த்து விட்டு, இந்திரா கட்சியய் ஒழிக்கும் கடமய்யய்யே முதற் கடமய்யாகக் கொள்ள வேண்டும்; இந்திரா ஆட்களய் விலக்கி மற்றவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்' (இதழ் : 1—1—80) என்று தலையங்கத்தில் இப்படி முழங்கிவிட்டு, அறிவியக்கப் பேரவை நடத்திய விழிப்புணர்ச்சி மாநாட்டில், இந்திரா காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர் திரு கே. பி. எஸ். மணியை மாநாட்டு திறப்பாளராகவும், இந்திராக் கட்சி முத்துப்பேட்டய் தருமலிங்கத்தை மலர் வெளியீட்டாளராகவும், இ.காங்கிரசின் குடந்தை வட்டப் பொறுப்பாளரான நிலக்கிழார் அமிழ்த கணேசனை முதல் இதழ் பெறுவோராகவும் ஏற்பாடு செய்தது ஏன்?

'மதுவிலக்குக் கொள்கையை தளர்த்திய தமிழக அரசின் செயலய் வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்த முடிவய் மாற்றி மீண்டும் மதுவிலக்குச் சட்டத்தய்த் தீவிரமாக அமுல்படுத்த

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

வேண்டும் என்று ஆண்டவ்ய் அரசய்க் கேட்டுக் கொள்ளுகிறது' என்று (இதழ்: 1—6—81) எழுதிவிட்டு, விழிப்புணர்ச்சி மாநாட்டில் பேரவய்யின் புரட்சிகரமான ஒரே ஒரு தீர்மானத்தை சாராய வியாபாரி துரை விரமுரசார் என்பாரை வைத்து முன் மொழிய வைத்தது, இவர்கள் முற்போக்கு சிந்தனைமேல் அவநம்பிக்கை ஏற்படுத்தாதா?

அறிவியக்கத்திற்கு இயக்க இயல் பார்வையுடன், வரலாற்றுப் பொருள் முதல் வாதம் பிறழாத நோக்கில் இலக்கிய வாதிகளை எடை போடத் தெரியவில்லை என்பதற்கு '34 ஆண்டுகாலமாக இங்கே ஓர் புரட்சியய் ஏற்படுத்த வகயற்ற "பொது உடமய்க் கட்சி" என்ற பெயரால் உள்ளவர்கள் வெறும் மிக்சர் கவிஞரான சுப்பிரமணியப் பாடகராய் அளவுக்கு மீறிப் போற்றித் துதிபாடிக் காலம் தள்ளும் போக்கய் அறிவியக்கம் கடுமையாகச் சாடியுள்ளது' என்று அறிவியக்க இதழின் 81-82 அரிய பணிகளாக ஆசிரியர் ச. நாத்திக நந்தனார் குறிப்பிடுவது சான்று.

அதே நேரத்தில் 'உண்மையில் தமது கவிதைகளில் காணப்படுவதை விடப் பெரிய சீர்திருத்தக் காரராகவாழ்ந்து காட்டியவர் பாரதியார்' என்கிறது முனைவர் சாலினியாரின் 'வாழ்க்கை வரலாற்றிலக்கியம்'. இ.காங்கிரஸ் பிரமுகர்கள் பங்கேற்ற தில்லி தமிழ்ச் சங்க பாரதி விழாவில் தலைமை வகித்த முனைவர் சாலய் அவர்கள், கவிஞர்களுக்குச் சாதிச் சழக்குகள் புரியாத விஷயமென்றும், பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் சமுதாய மேம்பாடு எடுப்பாக இடம் பெற்றிருந்த நுட்சமத்தை தெளிவு படுத்தியதாகவும் 'அமுத சுரபி' மார்ச் '82 இதழில் எழுதுகிறார் ஏ. ஆர். ராஜாமணி.

தனது கூர்மையான, நம்பிக்கை தரும் எழுத்தால், நெஞ்சில் நேர்மையுடன் உழைக்கக் காத்திருக்கும் வாசகத் தொண்டர்களை இவ்விதழ் உருவாக்கியிருக்கிறது. அவர்களை முற்போக்குப் பாதையில் வழிகாட்டும் முன் அறிவியக்கம் தன்னைக் கடுமையாக விமர்சித்து தன் வழுக்கல்களைச் சரிப்படுத்திக் கொண்டு, அடுத்த அடியை வைக்குமாறு தோழமையுடன் வேண்டுகிறோம்.

தனியிதழ் 100 காசு ஆண்டுக் கட்டணம்; ரூ 12-00
அறிவியக்கம், வண்டலூர், சென்னை-600 048.

[அடுத்து: "தாமரை"] —அக்கினிக்குஞ்சு, ...

# சிகரெட் நிறுவனங்களின் பகற் கொள்ளை

பிரபல சிகரெட் நிறுவனங்கள் சில கடைகளின் உதவியுடன் கோடிக்கணக்கில் கலால் வரி (Excise Duty) ஏய்ப்பு செய்து கறுப்புப் பணம் குவிப்பதாகத் தெரிகிறது.

விலையின் அடிப்படையில் வரி விதிக்கப்படுவதால் உயர் ரக சிகரெட்டுகளுக்கு அதிக வரி வசூலிக்கப் படுகிறது. பாக்கெட்டில் குறைவான விற்பனை விலையை முத்திரையிட்டு, குறைந்த வரியினைச் செலுத்தி, கடைக்காரர்களை அதிக விலைக்கு விற்குமாறு வற்புறுத்துகிறார்கள், இந்த லாபத்தில் ஒரு பகுதி கறுப்புப் பணமாக தயாரிப்பாளர்களுக்குச் செலுத்தப் படுகிறது. டில்லியில் மட்டும் கண்டு பிடிக்கப்பட்ட விலை விவரம் வருமாறு:—

| சிகரெட் பெயர் (20 அடங்கியது) | அச்சிட்ட விலை ரூ. பை | விற்கும் விலை ரூ. பை |
|---|---|---|
| ரீஜண்ட் கிங் | 4. 50 | 5. 50 |
| பனாமா | 2. 00 | 2. 75 |
| சார்மினார் | 1. 10 | 1. 25 |
| பில்டர் சார்மினார் | 2. 00 | 2. 75 |
| சான்சலர் | 12. 00 | 14. 00 |
| வில்ஸ் பில்டர் | 2. 90 | 3. 65 |

டில்லியில் மட்டும் இந்நிலை என்றால், இந்தியாவில் உள்ள மற்ற நகரங்களையும், சிற்றூர்களையும் எடுத்துக் கொண்டால், எவ்வளவு கறுப்புப் பணம் கோடிக் கணக்கில் ஈட்டப் படுகிறது என ஊகிக்கலாம்.

மூலப் பொருளான புகையிலையின் மீதே வரி விதிப்பது இந்தக் கறுப்புப் பண உற்பத்தியைக் கட்டுப்படுத்துமே. உயிரை உறிஞ்சும் புற்று நோய் போன்ற வியாதிகளை விளைவிக்கும் சிகரெட்டை, ஏழை எளியோர்க்கு மலிவாகக் கொடுத்து அரசு ஆதரிக்க அவசியமில்லை! —கார்த்திக்

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

## வெண் புள்ளிகள்

சரீரத்தில் உண்டாகும் வெண்மை நிறப் புள்ளிகள் ஆரம்பத்தில் கவனிக்காமல் விட்டால் உடம்பெல்லாம் பரவி விடுகிறது. இதை வெண் மேகம், கொடிய சர்ம வியாதி என்று பயந்து விடுகிறார்கள். இது நிற பேதம் தான். நோய் என்று சொல்ல முடியாது. சரீரம் முழுவதும் பரவி இருந்தாலும் குணமாகி விடுகிறது.

எமது பிரதம வைத்தியர்

டாக்டர் R. சங்கரநாராயணன், B. A. B. L. அவர்களை சென்னையில் எமது கிளையில் 147, கச்சேரி வீதி, மைலாப்பூர் சென்னை—4, போன்: 74076, பிரதி மாதம் 8, 9, 10 (3 நாள்) சந்தித்து ஆலோசனை பெறலாம்.

**ஆனந்தா வைத்திய சாலை,**
புதுதாராபுரம் ரோடு, பழனி-624 601.

**கல்விக்காக ஒதுக்கியது!**

| | | |
|---|---|---|
| முதல் 5 ஆண்டு திட்டத்தில் | | 8.7% |
| 2-வது | ,, ,, | 7.3% |
| 3-வது | ,, ,, | 6.7% |
| 4-வது | ,, ,, | 5.1% |
| 5-வது | ,, ,, | 3.5% |
| 6-வது | ,, ,, | 2.8% |

**நமது பள்ளிகள்!**

| | |
|---|---|
| கட்டிடங்களே இல்லாத பள்ளிகள் | 39,600 |
| ஓலைக் கூரைகளில் நடப்பவை | 46,457 |
| ஆடும் கட்டிடங்களில் உள்ளவை | 97,744 |
| குடி நீர் வசதியற்றவை | 2,68,490 |
| கரும் பலகை கூட இல்லாதவை | 18,000 |

**பாரதி கொள்ளுப் பேரர்**

பாரதி பாடல்களைப் பாடி அவர் புகழ் பரப்புபவர் இனிய பாடகர் இராஜ்குமார் பாரதி. இவர் பாரதியின் கொள்ளுப் பேரர். சிரஞ்ஜீவி என்ற சினிமாப் படத்தில் இவர் 'பழம் பழுக்கட்டுமா — உனைக்கட்டி அணைக்கட்டுமா!' என்ற ஆபாசப் பாடலைப் பாடி சினிமா வியாபார சாக்கடையில் விழுந்திருப்பது கவலைக்குரியதாகும். சினிமா விளம்பரமாயை பாரதி பரம்பரையில் வந்தவரையே பலி கொண்டு விட்டதே!

—சீ. இராகுராமன்

## அல்ஸர் வராதிருக்க...

இந்தியாவின் மொத்த மக்கட் தொகையில் 3% அல்சர் நோய்க்கு ஆளாகிறார்கள். 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 'O' குரூப் ரத்தம் உள்ளவர்களுக்கும் பெரும்பாலும் வரும் பரம்பரை நோய் இது.

நம்முடைய இரைப்பையின் உட்சுவர் கோடிக்கணக்கான செல்களால் ஆனது. அவை உண்ணும் போது சில அமிலங்களையும், பெப்சினையும் சுரக்கின்றன, இந்த செல்கள் வேறு நிலைகளிலும் சுரக்கலாம். ஒரு நீண்ட நரம்பு மண்டலம் (Vagus nerve) மூளையையும் வயிற்றையும் இணைக்கிறது. பசி உணர்வு மீறும். போதும், கவலை, நெருக்கடி தோன்றும் போதும் இந்த வாகஸ் நரம்பு தூண்ட, இரைப்பையில் அமிலம் அதிகம் சுரக்கப்படுகிறது. இரைப்பையில் உணவு இல்லாத நேரத்தில் இந்த அமிலங்கள் இரைப்பையின் உட்சுவர்களையும் டியோடினத்தின் முதல் 5 செ.மீட்டர் நீளமுள்ள தொடக்கப் பகுதியையும் அரித்துப் புண்ணாக்கி விடுகின்றன. இந்நோய் என்றும் நமக்கு வராமலிருக்க உதவும் வழிகள் இதோ:—

1. அல்சர் வருவதற்குக் கவலைகள், நெருக்கடிகளே முக்கியமான காரணங்கள். எனவே சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம் கவலை கொண்டு வருந்தி அழுங்கும் மனப்பான்மையைத் தவிர்க்க.
2. நரம்புத் தளர்ச்சியால் அல்சர் வரும். நரம்புத் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க இளமை முதற்கொண்டே யோகாசனங்கள் செய்க.
3. புகை குடிப்பதைக் கட்டாயம் நிறுத்தி விட வேண்டும். மற்றவற்றால் வரும் அல்சரைக் குணப்படுத்தி விடலாம். புகையின் நிகொடினால் வரும் அல்சரைக் குணப்படுத்த முடியாது. அது பின்னர் கேன்சராகவும் மாறக்கூடும்.
4. சாராயம் போன்ற மதுபான வகைகளைக் கனவிலும் கருதாதீர்.
5. நேரம் தவறி ஒழுங்கீனமாக உண்ணும் பழக்கத்தைத் தவிர்க்க. சக்திக்கு மீறி வேலை செய்வதைக் குறைக்க.

—சுட்டி பாரதி

(அடுத்து: சிறுநீரகக் கோளாறுகள் வராதிருக்க)

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

***நிருபர் :*** (மாத வெளியீடு) ஆசிரியர்: ஜெமினி சேகர், 74, ஏழு கோவில் தெரு, சிவகாசி. தனிப்பிரதி: 50 காசுகள்.

***பாரதி :*** (மாத இதழ்) ஆசிரியர்: இரா. விஜயபோஸ், 186, வைத்திய நாதபுரம், நாகர்கோவில்-629002. தனிப்பிரதி: 50 காசு ஆண்டு சந்தா: ரூ 6.00.

***சிதறல் :*** (மாணவர் காலாண்டிதழ்) ஆசிரியர்: மா. தே: ஜான்-கென்னடி, கல்வாரி சர்ச் காம்பவுண்டு, சாந்த நகர், வாணியம்பாடி ரோடு, திருப்பத்தூர், வட ஆற்காடு-635601. ஆண்டு நன்கொடை ரூ.4/

***ஸ்வீட் :*** (சிறுவர் இன்சுவை மாத இதழ்) ஆசிரியர்: முகேஷ் D. பாணி, 12, நல்ல தம்பி ஆசாரி தெரு, குனியமுத்தூர், கோவை-641008 தனிப்பிரதி: 50 காசு; வருட சந்தா: ரூ. 6.00

***கேடயம் :*** (மக்கள் உரிமைக் கழக ஏடு) மாதமிருமுறை, தொடர்புக்கு: V. சொக்கலிங்கம், 50, எல்லிஸ் ரோடு, அண்ணா சாலை சென்னை-2, தனியிதழ்: 50 காசு, ஆண்டு சந்தா: ரூ. 12.00

***அலைகள் :*** (சைக்லோஸ் டைல்டு மாத இதழ்) தனிச்சுற்றுக்கு மட்டும், ஆசிரியர்: கே. என். பிரபாகரன், 7, ஸ்வர்ணாம்பிகை தெரு, சேலம்-1.




***மாற்றம் :*** (சைக்லோஸ் டைல்டு மாத இதழ்) சமூக விழிப்புணர்வு ஏடு ஆசிரியர்: சூசை, 56.C, மாத்வரம் நெடுஞ்சாலை, சென்னை-600060. ஆண்டு சந்தா ரூ: 3.00

***புள்ளியில்லாக் கோலங்கள் :*** (புதுக்கவிதைத் தொகுப்பு) ஆசிரியர்: மதுக்கூர் இராமலிங்கம், கிடைக்குமிடம்: திருநாவுக்கரசு பதிப்பகம், விக்ரமம், மதுக்கூர்-614903. விலை ரூ. 4.00

***விடியல் மலர்கள் :*** (பாடல் தொகுப்பு) வெளியீடு: காவிரி இலக்கியப் பண்ணை, 18.B, மறைமலையடிகள் நூல் விற்பனையகம், காளியம்மன் கோயில் தெரு, அலசூர், பெங்களூர்-560008. விலை ரூ 3.00

***பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டமும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் :*** (அணிசேரா நாடுகளின் அதிபர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்) தமிழ் நாடு காங்கிரஸ் (கா) வெளியீடு, எழுதியவர் நெடுமாறன், 1, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, சென்னை-2, விலை: ரூ. 1.00

***சட்டம்-மாற்றத்திற்கான கருவி :*** (சமூக சிந்தனை வளர்ச்சி மையம் வெளியீடு-2) சுப்ரீம் கோர்ட் நீதிபதி பி.என். பகவதி அவர்களால் சமூக செயல்பாட்டுக் குழுக்கள் சட்டத்தை சிறப்பாக பயன்படுத்துவது பற்றிய சர்வதேசக் கருத்துப் பட்டறையின் ஆரம்ப விழாவின்போது வழங்கிய உரையின் சுருக்கப்பட்ட பதிப்பு (தனிச்சுற்றுக்கு மட்டும்) கிடைக்குமிடம்: சமூக சிந்தனை வளர்ச்சி மையம், 76, என். ஜி. ஓ. காலனி, திண்டுக்கல்-624009. நன்கொடை ரூ. 1.00

***ஏஜெண்டு விற்பனையாளர்கள்*** *அதிகாரப்பூர்வமாக கீழ்க்கண்ட இடங்களில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இடங்கள் தவிர பிற இடங்களிலிருந்து விற்பனை செய்ய ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்:-*

***சென்னை :*** நகரம் முழுவதும்.

***செங்கல்பட்டு மாவட்டம் :*** காஞ்சிபுரம், திருவள்ளூர், வண்டலூர், போரூர், செங்கல்பட்டு.

***வட ஆற்காடு மாவட்டம் :*** திருப்பத்தூர், ஆரணி, போளூர். ரெட்டியூர், திருவண்ணாமலை, குடியேற்றம், வேலூர்

***தென் ஆற்காடு மாவட்டம் :*** விழுப்புரம், கடலூர், சிதம்பரம், திருக்கோவிலூர், வடலூர், வளவனூர். கள்ளக்குறிச்சி,

***தஞ்சாவூர் மாவட்டம் :*** கும்பகோணம், வேதாரண்யம், தஞ்சாவூர் திருவாரூர், மன்னார்க்குடி, அய்யம்பேட்டை, ஒரத்தநாடு.

***திருச்சி மாவட்டம் :*** திருச்சி, ஸ்ரீரங்கம், கரூர், அரும்பாவூர், வெள்ளியனை.

***சேலம் மாவட்டம் :*** சேலம், நாமக்கல், சங்ககிரி, ஜலகண்டாபுரம்,

***பெரியார் மாவட்டம் :*** கொடுமுடி, B. குமாரபாளையம்; சென்னிமலை

***தர்மபுரி மாவட்டம் :*** ஊத்தங்கரை.

***நீலகிரி மாவட்டம் :*** ஊட்டி, கோத்தகிரி, கிளூராங்.

***கோயம்புத்தூர் மாவட்டம் :*** கோயம்புத்தூர், அவனாசி, நம்பியாம்பாளையம், பூளைமேடு, திருப்பூர், உடுமலைப்பேட்டை, வி. ஜி. புதூர், சூலூர், சேயூர், காரமடை, நெகமம், மின்பாறை வால்பாறை, குப்புசாமி நாயுடுபுரம், சின்னியம்பாளையம், பெதப்பம்பட்டி, ஈரோடு, செஞ்சேரிமலை. பொள்ளாச்சி,

***மதுரை மாவட்டம் :*** மதுரை, திண்டுக்கல், தேனி, தென்கரை.

***புதுக்கோட்டை மாவட்டம் :*** உலகன்பட்டி


***இராமநாதபுரம் மாவட்டம் :*** இராமநாதபுரம், காரைக்குடி. சாத்தூர், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், மானாமதுரை, இராமேஸ்வரம்.

***திருநெல்வேலி மாவட்டம் :*** திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி, இராதாபுரம், குருக்குச்சாலை, புதியம்புத்தூர், பாரல் எப்போதும் வென்றார், கரிவலம் வந்த நல்லூர், சங்கரன் கோவில்.

***கன்னியாகுமரி மாவட்டம் :*** நாகர்கோவில், மார்த்தாண்டம், குழிக்கரை.

***வெளி மாநிலங்கள் :*** பம்பாய், பெங்களூர்.


FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011



ஆசிரியர்: நிர்மலா கந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: J. S. கட்ரேஸ் னா,
இருவா பிரிண்டர்ஸ், 35 லப்பை தெரு, சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011

Licensed to post without prepayment Licence No. TN/MS(N)W




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane 'oduction with innovative technology and the farmers have achieved successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ng over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand rmers (a bulk of Whom are small and marginal farmers) and generating ainful rural employment to over fifty thousand families in the primary. econdary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro rammes (I) Sakthi High School Provides a conducive environment for udy and development of rural children. (II) Sakthi Institute of Techno gy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam lospital provides medical care for the region.

ead Office:
3-A, Race Course Road,
oimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM2179 / Feb 2011